Chundikuli Branch Library

Registered as a News Paper  பக்கங்கள் 04  விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  ஆனி 31  [15-07-98]  வியாழக்கிழமை  ஒசை 147

## பூரண சிகிச்சை பெறத்தவறின் மலேரியாவை குணப்படுத்த முடியாது

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பிரதேசத்தில் மலேரியா ஒரு முக்கிய நோயாகியுள்ளது. ஒழுங்கானமுறையில் மருத்துவர்களின் அறிவுறுத்தலின்றி மலேரியாவுக்கான மருந்து வில்லைகளை அரைகுறையாக பாவிப்பதே இதற்கு காரணமெனவும் நோயாளிகள் பூரண சிகிச்சை பெறத் தவறும்பட்சத்தில் இந் நோயை குணப்படுத்த முடியாமற்போகும் நிலைமை ஏற்படுமென பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளரின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. இதுபற்றி அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இந்நோயால் பீடிக்கப்பட்ட நோயாளி ஒருவர் அவரவர் வயதிற்கேற்ப தொடர்ந்து 5 நாட்களிற்கு குளிகைகளை உட்கொள்ளவேண்டும். உணவருந்திய பின்பு குளிகைகளை உட்கொள்வதன்மூலம் சத்தியேற்படுவதையும், குடல் அழற்சியையும் தவிர்க்க முடியுமெனவும் கர்ப்பவதிகளுக்கு இந்நோய் (3 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா செல்லும் இளைஞர்கள் உளவாளிகளால் தொடர்ந்து கைது

## 'பிறவுண் கொம்பனி'யில் தடுத்துவைப்பு

(வவுனியா)

வட பகுதியில் இருந்து வவனியா நகர் நோக்கிச் செல்லும் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் உளவாளிகளால் கைது செய்யப்பட்டுவருகின்றனர். நேற்றும் இவ்வாறு பத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்படும் இவர்கள் வவுனியாவிலுள்ள 'பிறவுண் கொம்பனி' கட்டடத்திலுள்ள முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த வாரம் முதல் வவுனியா நகரப்பகுதியில் சிறிலங்கா இராணுவ உளவாளிகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளதாகவும் இவ் உளவாளிகள் கடந்த சில நாட்களாக தமிழ் இளைஞர்களை கைது செய்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினம் மட்டும் வவுனியா நகர்ப்பகுதிக்குள் சென்ற பத்து தமிழ் இளைஞர்களை உளவாளிகள் கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றதாக வவுனியாவில் இருந்து எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கைது செய்யப்பட்டு வரும் தமிழ் இளைஞர்கள் பிறவுண் கம்பனி கட்டட முகாமில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ச்சியான விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை நேற்று வட பகுதியை நோக்கி சில தடை செய்யப்பட்ட பொருள்களுடன் வந்து கொண்டிருந்த இரு பெண்களும், இளைஞர் ஒருவரும் தாண்டிக்குள இராணுவ சோதனை நிலையத்தில தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நேற்றைதினம் வட பகுதியைநோக்கி வந்துகொண்டிருந்த லொறிகளில் எடுத்துவரப்பட்ட துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களை ஈரப்பெரியகுளத்தில் உள்ள இராணுவத்தினர் பறிமுதல் செய்துள்ளனர்.

அதேவேளை தமிழ் இளைஞர்களை இனம் காட்டி கைது செய்வதற்கு வசதியாக ஈ.பி.டீ.பி யைச்சேர்ந்தவர்கள் வவுனியா நகருக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் மேலும் பல தடைசெய்யப்பட்ட பொருள்களுடன் வட பகுதி நோக்கி வரும் பயணிகளிடமிருந்து மேற்படி பொருள்கள் தொடர்ந்தும்பறிமுதல் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆணியை எடுத்து வந்தநபர் ஒருவரை வாங்கிய ஆணியை திருப்பிக் கொண்டு போய் கொடுத்து விட்டு வரும்படி பணித்ததாகவும் அதிக படச்சுருள்களை எடுத்து வந்த ஒருவரிடமிருந்து ஒரு படச்சுருள் தவிர ஏனைய அனைத்துப் படச்சுருள்களும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## ஐ.தே.க. தலைவர்களுடன் ரொனி தொலைபேசி பேச்சு

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் ரொனி டிமெல் ஐ தே.க வின் உயர் மட்டத் தலைவர்களுடன் தொலைபேசியில தொடர்பு கொண்டு நீண்ட உரையாடல்கள் நடத்திவருவதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

ரொனிடிமெல் விரைவில் கொழும்பு திரும்பி ஐ தே க. வில் இணையலாம் என்ற ஊகம் பரவலாக கொழும்பு அரசியல் வட்டாரத்தில் நிலவுகின்றது.

## வாகரையில் சுற்றிவளைப்பு

## ரெலோ தேசவிரோதிகளால் ஆறுபொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசவிரோதிகளும் இணைந்து சுற்றிவளைத்து ஆறு பொதுமக்களைக் கைது செய்துகொண்டு சென்றனர்.

நேற்றுக்காலை வாகரைகல்லடி பகுதியையே சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசவிரோதிகளும் திடீரென சுற்றிவளைத்தனர்.

சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய படையினர் அப்பகுதியில் வைத்து ஆறுபொது மக்களைக் கைது செய்து வாகரை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

## அகதிகளை அனுப்ப சிங்கப்பூர் கப்பல்

(டில்லி)

தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகளை மீண்டும் இலங்கை கொண்டுவர சிங்கப்பூர் கப்பல் ஒன்றை அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்துள்ளது.

# கொழும்பு அகலப்பாதை 2500 வீடுகள் உடைப்பு

## 10,000 பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் அதிவேக பாதைஅமைப்பைக் கண்டித்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு வரை புதிய நேர் பாதை ஒன்றினை அமைக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவது தெரிந்ததே.

மேற்படி வீதியை அமைக்கும் பணி யப்பான் நிறுவனம் ஒன்றிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ் வீதி அமைப்பால் சுமார் 2500 வரையான வீடுகள் இடிக்கப்படவிருப்பதாக தெரிய வருகிறது.

இதனால் இவ் வீடுகளின் குடியிருப்பாளர்கள் சுமார் பத்தாயிரம் பேர் வரையில் ஒன்றிணைந்து இவ் வீதி அமைப்பிற்கு எதிராக இவற்றை அமைக்கும் நிறுவன அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். இதன் போது திரு. பாஸ்கரலிங்கம், வீடமைப்பு நிர்மாண அமைச்சு, பெரும் தெருக்கள் திணைக்களம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா பிரதி தூதுவராக

## வவுனியா-மன்னார் வீதியில் விமானக் குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில் நேற்று சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியுள்ளன. மாலை 5 30 மணியளவில் இப்பகுதிக்கு விரைந்துவந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இப்பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்ட பின் தாக்குதலை மேற்கொண்டன.

இவ் விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த போது ஒரு உலங்கு வானூர்தி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இக் குண்டுவீச்சு தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

## உடுகம்பொல அமெரிக்கா பயணம்?

## துணைப்படை வீரருக்கு நினைவஞ்சலி நிகழ்ச்சி

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் ... விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். மாவீரர் ...

# 2500 வீடுகள் உடைப்பு

## 10,000 பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் அதிவேக பாதைஅமைப்பைக் கண்டித்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு வரை புதிய நேர் பாதை ஒன்றினை அமைக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவது தெரிந்ததே.

மேற்படி வீதியை அமைக்கும் பணி யப்பான் நிறுவனம் ஒன்றிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ் வீதி அமைப்பால் சுமார் 2500 வரையான வீடுகள் இடிக்கப்படவிருப்பதாக தெரிய வருகிறது.

இதனால் இவ் வீடுகளின் குடியிருப்பாளர்கள் சுமார் பத்தாயிரம் பேர் வரையில் ஒன்றிணைந்து இவ் வீதி அமைப்பிற்கு எதிராக இவற்றை அமைக்கும் நிறுவன அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். இதன் போது திரு. பாஸ்கரலிங்கம், வீடமைப்பு நிர்மாண அமைச்சு, பெரும் தெருக்கள் திணைக்களம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினம் மட்டும் வவுனியா நகர்ப்பகுதிக்குள் சென்ற பத்து தமிழ் இளைஞர்களை உளவாளிகள் கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றதாக வவுனியாவில் இருந்து எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கைது செய்யப்பட்டு வரும் தமிழ் இளைஞர்கள் பிறவுண் கம்பனி கட்டட முகாமில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ச்சியான விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் அங்கிருயத்தில தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நேற்றைதினம் வட பகுதியைநோக்கி வந்துகொண்டிருந்த லொறிகளில் எடுத்து வரப்பட்ட துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களை ஈரப்பெரிய படுகிறது.

அத்துடன் மேலும் பல தடைசெய்யப்பட்ட பொருள்களுடன் வடபகுதி நோக்கி வரும் பயணிகளிடமிருந்து மேற்படி பொருள்கள் படச்சுருள்களை எடுத்து வந்த ஒருவரிடமிருந்து ஒரு படச்சுருள் தவிர ஏனைய அனைத்துப் படச்சுருள்களும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# துணைப்படை வீரருக்கு நினைவஞ்சலி நிகழ்ச்சி

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் பட்டிக்குடியிருப்பு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் வீரச்சாவடைந்த துணைப்படை வீரர் வீரவேங்கை துரைராஜாவின் (சிவசம்பு துரைராஜா) இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நெடுங்கேணி வட்டத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் கிரிசுட்டான் பகுதி சிறுவர் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வினை முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி திரு. அன்பு மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். மாவீரர் துரைராஜாவின் உருவப்படத்துக்கு அவரது மனைவியார் ஈகைச்சுடரேற்றி வைத்தார்.

தொடர்ந்து சிறப்புத்தளபதி திரு. அன்பு அவர்கள் திருமதி துரைராஜாவிற்கு கௌரவிப்பு பொருள் வழங்கினார். இந்நிகழ்வில் முல்லை மாவட்ட துணைப்படைப் பொறுப்பாளர் அமுதன் முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் இளமாறன், முல்லைத்தீவு கோட்ட சிறப்பு பொறுப்பாளர் பரமன், முல்லைத்தீவு

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# லெப்டினன்ட் சீலன் நினைவு வீரவணக்க கூட்டம்

(நமது நிருபர்)

லெப்டினன்ட் சீலன் வீரவேங்கை ஆனந் ஆகியோரின் பத்தாம் ஆண்டு வீரவணக்கக் கூட்டமும் நினைவுப் பூங்கா திறப்புவிழா நிகழ்வும் இன்று மாலை 7 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுகள் லெப்டினன்ட் சீலன் மற்றும் வீரவேங்கை ஆனந் ஆகியோர் வீரச்சாவடைந்த இடமான மீசாலையில் உள்ள வெள்ளம் போக்கட்டியில் நடைபெறவுள்ளன.

சிறிலங்கா பிரதி தூதுவராக

# உடுகம்பொல அமெரிக்கா பயணம்?

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல அமெரிக்காவிலுள்ள சிறிலங்கா தூதுவராலயத்தின் பிரதித் தூதுவர் பதவிக்கு நியமிக்கப்பட உள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பல வருடங்களாக அமெரிக்காவில் வாழும் தனது குடும்பத்துடன் உடுகம்பொல சேர்ந்துகொள்ள உதவும் வகையிலேயே அரசு இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயம் முன்னதாக உடுகம்பொல அமெரிக்கா செல்ல விஸா வழங்கமறுத்தது குறிப்பிடத்தக்கது. உடுகம்பொலவின் மனித உரிமைகள் மீறல் நடவடிக்கை காரணமாகவே விஸாவுக்கான அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# குடும்பநலசேவையாளருக்கு சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

குடும்பநல சேவையாளருக்கும், பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் சேவைக்கால பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இப் பயிற்சி யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் நடக்கவிருக்கின்றது வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த குடும்பநல சேவையாளருக்கும், பொதுசுகாதார பரிசோதகர்களுக்கும் குழுக்களாக இப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பொது சுகாதார பரிசோதகர்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# வவுனியா-மன்னார் வீதியில் விமானக் குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில் நேற்று சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியுள்ளன. மாலை 5 30 மணியளவில் இப்பகுதிக்கு விரைந்துவந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இப்பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்ட பின் தாக்குதலை மேற்கொண்டன.

இவ் விமானங்கள் குண்டுவீச்சு தாக்குதலை நடத்திக்கொண்டிருந்த போது ஒரு உலங்கு வானூர்தி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இக் குண்டுவீச்சு தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரிய வரவில்லை.

# மட்டு. காட்டுப்பகுதியில் இரு தினங்கள் குண்டுவீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காட்டுப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் இரு தினங்கள் குண்டு வீச்சுத் தாக்குலை நடாத்தின.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் மட்டக்களப்பில் ஆண்டாங்குள பிரதேசத்தில் உள்ள அங்கொடை காட்டுப் பகுதியிலேயே இப் பாரிய குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

சம்பவதினம் மேற்படி காட்டுப் பகுதிக்கு வந்த உலங்கு வானூர்தி மற்றும் இரு குண்டு வீச்சு விமானங்கள் ஆகியன இணைந்து இத் தாக்குதலை நடாத்தின. இத் தாக்குதல் சுமார் 90 நிமிடநேரம் இடம் பெற்றது.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் இதே காட்டுப் பகுதிக்கு விரைந்த உலங்கு வானூர்தியும் இருகுண்டுவீச்சு விமானங்களும் அதே இடத்தில் சுமார் ஒரு மணி நேரம் தொடர்ச்சியான குண்டு வீச்சுத்தாக்குதலைமேற்கொண்டதாக தெ விக்கப்படுகிறது.

உடுகம்பொல சத்தியக்கடதாசியை பிரசுரித்த

# பத்திரிகை மீதான வழக்கு சட்டமா அதிபரால் வாபஸ்

(கொழும்பு)

முன்னாள் பிரதிபொலிஸ்மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல 'யுக்திய' மற்றும் 'லக்தீவ' பத்திரிகைகளில் பொலிஸ்மா அதிபர் ஏனஸ்ட் பெரேரா பற்றிப் பகிரங்கப் படுத்திய கருத்துக்கள் தொடர்பான வழக்கை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றுள்ளார்.

இப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைக் கைவிடப் போவதாகத் தான் ஏற்கனவே கொழும்பு உயர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தி உள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்தார்.

உயர் நீதி மன்றம் உடுகம்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# யுத்தக் கைதிகளின் உறவினர் அரசாங்கத்திற்கு அவசரச் செய்தி

(யாழ்ப்பாணம்)

யுத்தக் கைதிகளை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா அரசுக்கு அவசர வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக யுத்தக் கைதிகளின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

தமது பிள்ளைகளை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக சிறிலங்காஅரசிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும். தமது பிள்ளைகளை உடன்விடுவிப்பதாககூறி சிறிலங்கா அரசு தம்மை ஏமாற்றி விட்டதாகவும் பெற்றோர்கள் குறிப்பிட்டதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது

தம்முடன் யாழ் வந்து விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகளுடன் திரும்பிச் சென்ற உறவினர்கள் இதுவிடயம் தொடர்பாக உரிய வகையில் செயற்பட்டுக் கொண்டிருப்பதாக தாம் அறிவதாக யுத்தக் கைதிகளின் பெற்றோர் தெரிவித்தனர்.

யுத்தக்கைதிகளின் உறவினர்களில் ஒருவரான திருமதி கருணாவதி புலிகளின் குரலுக்கு அளித்த தகவலில் தம்மை விடுதலைப் புலிகள் உரிய வசதியளித்து தகுந்த முறையில் கவனிப்பதாகவும், தமதுபிள்ளைகளை தம்முடன் கூட்டிச்செல்ல முடியவில்லையே என்ற கவலை தவிர வேறு எந்த பிரச்சினையும் தமக்கில்லை எனவும் குறிப்பிட்டார்.

தமதுபிள்ளைகளை அழைத்துச் செல்ல ஏதுவான சூழ்நிலை ஏற்படும் வரை தாம் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்க விரும்புவதாக யுத்தக் கைதிகளின்பெற்றோர்கூறினர்

# இயக்கச்சி இராணுவம் முன்னேற முயற்சி

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சி இராணுவ காவலரணிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து இராணுவத்தினர் முகாம் திரும்பினர்.

நேற்று முன் தினம் காலை 11. 15 மணியளவில் இயக்கச்சி பண்ணைப் பகுதி காவலரணிலிருந்தே படையினர் முன்னேறி வந்தனர். சுமார் 75 யார் தூரம் வரை முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் அங்கிருந்து பின்வாங்கி காவலரணிலிருந்தவாறு எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

## வரி விளம்பரம்


### விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆலங்கட்டை றோட், வெள்ளாவத்தை, பொலிகண்டி கற்கண்டு மாமா சைக்கிள்கடை பொலிகண்டி. (5331)

### புலமைப்பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள் 18 07-93 ஞாயிறு வெளியிடப்படும் விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும் புதியகல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5372)

### திருத்திக் கொடுக்கப்படும்

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரம், பிரதி பண்ணும் இயந்திரம் சிறந்த தொழில் நுட்பவல்லுநர்களால் குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். றொசவூட GR மருதலிங்கம் 8/1, E அம்மன் வீதி, கந்தர் மடம் யாழ்ப்பாணம். (5211)


### அங்குரார்ப்பண கூட்டம்

பளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 18-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது

### அன்பளிப்பு


பண்டிதர் குடியிருப்பு -கெற்பலி அகதிகள் முகாமில் இயங்கும் யாழ் - புங்குடுதீவு சிறி சண்முகநாத வித்தியாலயத்திற்கு யாழ் மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் 15 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த உபகரணங்களை வழங்கியுள்ளது. (21)

---

15-07-1991 இல் நடந்த ஆட்லறி ஷெல் தாக்குதலினால் கருகிப்போன

**எம் மலர்களின்**

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர் — தோற்றம்:

கந்தசாமி **பேரம்பலம்** — 18 12 1946

[நெல்லை க பேரன்]

திருமதி

**பே. உமாதேவி** — 15-06-1956

செல்வன்

**பே. உமாசங்கர்** — 02 10-1976

செல்வி

**பே. ஷர்மிளா** — 13-08 1984

**மறைவு: 15-07-1991**

ஓர் இரவில் ஒரு பொழுதில் கருகிய எம்மவர்களுக்காக இன்று (15-07-1993) வியாழக்கிழமை அவரது குடும்பத்தினரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஈராண்டு சென்றதண்ணா
ஓரிரவில் உங்கள் குடும்பம் கருகியதேன்?
எமை ஈன்ற பெற்றோரிலும் மேலாய்
சுமை தாங்கி செழிப்புற வைத்தீரண்ணா
சீறி வந்த ஷெல்லுக்கும் கண்ணில்லை
கதறும் எங்கள் குரலுக்கும் முடிவில்லை
நெல்லையில் க பேரன் வாழ்ந்ததே போதுமென்று
தில்லையில் ஆடும் நடராஜன் தன்
எல்லையில் திருவடி இணைந்து ஈராண்டு
எல்லையில் ஆழ்ந்து துயர் அடைகின்றோம்
உங்கள் எழுததுத்தான் மிஞ்சிய தண்ணா
செல்வங்கள மனைவி தன்னைச் -
சேர்த்துமே சென்றீரண்ணா
சொல்லுங்கள் மீணடும் இங்கே வருவதென்றோ?

பெற்றோர், சகோதரர்.

முருகன் கோவிலடி,
நெல்லியடி. (3438)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் ஞானவேல்**

(சிற்றம்பலம் தயாநந்தராசா)

இடைக்குறிச்சி வரணி

பிறப்பு: 02-11-1966 — வீரச்சாவு: 15-07-1989

திதி 15-07-1993

தமிழீழ விடிவிற்காய்
தரணியில் உதித்த தனயனே
மக்களின் விடிவிற்காய் — தமிழ்
மண்ணில் மலர்ந்த மறவனே
அந்நிய படைக்கு புலி வீரத்தை
அடிக்கடி உணர்த்தியவனே
உன் விடுதலை இரத்தம்
விழலுக்காய் பாய்வதில்லை
வெற்றிக்கு முன்பாக ஓய்வதுமில்லை.

— குடும்பத்தினர்


(சி/7002)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
06.10.1969

இறப்பு:
15.09.1991



அந்தோனிப்பிள்ளை அல்போன்ஸ் குணரட்ணம்

சுவிசிலுள்ள கங்கை ஒன்று
சொலலாமல் கொள்ளாமல் உன் உயிரை
தான் பறித்த காரணத்தை நாமறியோம் எம்மகனே

---

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-07-15

1983ஆம் ஆண்டு இதேதினத்தில் சாவகச்சேரி-மீசாலைப் பகுதியில் சிறிலங்காப்படையின் சுற்றிவளைப்பில் விழுப்புண் அடைந்த நிலையில் சகதோழனால் சுடுவிக்கப்பட்டு வீரச்சாவெய்திய:

**லெப் சீலன்/ஆசீர்** (ஞானப்பிரகாசம் லூக்காஸ் சால்ஸ் -அல்ரணி - புனித மரியாள்வீதி - திருமலை)

**ஆனந்** (இராமநாதன் அருள்நாதன் மயிலிட்டி-காங்கேசன்துறை)

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

★ **வேலுப்பிள்ளை சித்திரவேல்** (மட்டு)

1988ஆம் ஆண்டு திருமலை - குச்சவெளிப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**2-ம் லெப். ஞானி** (காளிமுத்து சிவராசா-திரியாய்-திருமலை)

மன்னார்-தள்ளாடி முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட பரப்புக்கடந்தானைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

கிளிநொச்சி - பரந்தன் சந்தையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட மாணவி உட்பட 5 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு ஒட்டிசுட்டான்-கற்சிலைமடுப்பகுதியில் இந்தியப்படையினரின் வாகன தொடர் அணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் ஞானவேல்** (சிற்றம்பலம் தயானந்தராசா-வரணி, கொடிகாமம்-யாழ்)

மணலாறு-செம்மலைப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**அசோக்** (கந்தையா அசோக்குமார்-செம்மலை-மணலாறு)

யாழ்-கல்வியங்காட்டில் இந்தியப்படையினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**இரகுசிவா/சின்னநசீர்** (கார்த்திகேசு சிவபரன்-54, அம்பாள்வீதி, நாயன்மார்கட்டு-யாழ்)

யாழ் திருநெல்வேலியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

★ **முருகன்** (சோமசுந்தரம் திருமுருகன்-புன்னாலைக்கட்டுவன் தெற்கு-யாழ்)

யாழ்-நல்லூரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தீவிர நாட்டுபற்றாளரான யாழ் செயலக ஊழியர்,

**செல்லத்துரை சச்சிதானந்தம்** (மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி)

1990ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**ஹனிபா** (அபுசாலி புகாரி-அக்கரைப்பற்று-அம்பாறை)

மாங்குளத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**சலீம்** (சிவனுப்பிள்ளையோகநாதன்-விசுவமடு, முல்லைத்தீவு)

யாழ்-பழையபூங்காப் பகுதியில் சிறிலங்கா விமானப்படைக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய,

**லெப். அம்பி** (சித்தர் கனகரத்தினம் - அச்சுவேலி தெற்கு)

இத்தினம் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 03 தமிழர்கள்.

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மத்திய முகாம் 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

திருமலை- நிலாவெளி, கோபாலபுரம் இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 07 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ க. வெ. நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியிலிருந்து கட்டைக்காட்டுக்கு முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் முகுந்தன்** (தியாகராசா விக்கினேஸ்வரன் - வதிரிரயன் வடக்கு, தாளையடி - யாழ்.)

லெப். சந்திரன் (நாகராசா நவதாஸ் - அச்சுவேலி

---

# 10-ம் ஆண்டு நினைவஞ்சலி

15-07-83 அன்று மீசாலையில் சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின்போது இடம்பெற்ற நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

கிழமை மாலை 4.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது

அன்பளிப்பு

பண்டிதர் குடியிருப்பு - கெற்பலி அகதிகள் முகாமில் இயங்கும் யாழ் - புங்குடுதீவு சிறி சண்முகநாத வித்தியாலயத்திற்கு யாழ் மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் 15 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த உபகரணங்களை வழங்கியுள்ளது. (21)

நெல்லையில் க பேரன் வாழ்ந்ததே போதுமென்று
தில்லையில் ஆடும் நடராஜன் தன்
எல்லையில் திருவடி இணைந்து ஈராண்டு
எல்லையில் ஆழ்ந்து துயர் அடைகின்றோம்
உங்கள் எழுகதுத்தான் மிஞ்சிய தண்ணா
செல்வங்கள மனைவி தன்னைச் -
சேர்த்துமே சென்றீரண்ணா
சொல்லுங்கள் மீணடும் இங்கே வருவதென்றோ?

பெற்றோர், சகோதரர்.

முருகன் கோவிலடி,
நெல்லியடி.

(3438)

# 10-ம் ஆண்டு நினைவஞ்சலி

15-07-83 அன்று மீசாலையில் சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின்போது இடம்பெற்ற நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட



வீரச்சாவு

15 — 07 — 1983



**வீரவேங்கை ஆனந்** [அருள்நாதன் இராமநாதன]

**லெப். சீலன்** [லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி]

25-01-1964 <- பிறப்பு -> 19-11-1960

தமிழ் ஈழத்தின் மழலைகளுக்கோர் விண்ணப்பம்
உங்களுக்குள் சீலனும் ஆனந்தும் உலவுகின்றனர் தெரியுமா
கண்டீர்களா, களிப்படைகின்றீர்களா, பெருமிதமா
ஈழதது அத்தியாயத்தின் இறுகிய வைரங்கள் அவர்கள்
இந்த மாபெரும் நாட்டின் படிக்கற்கள்
ஈழத்து உழவர்களே இங்கு ஓர் சிறிய மனு
பாருங்கள் உங்கள் கழனிகளில்
புதுப்புது விதைகளாகப் பெருகுவார்கள் அவர்கள்
திருமலை தந்த சீலனும் மயிலையின் ஆனந்தும்
பொருநெருப்பு இவர்கள மீசாலையில்
மாண்டுவிடவில்லை சீறுகின்ற துப்பாக்கிகளில்
இன்னும் சீறிக்கொண்டே இருக்கின்றார்கள்
எங்கள் உயிரினும் இனிய வீரர்களே
உங்கள் உறுதியான நடையில். நீங்கள்
ஏந்துகின்ற துப்பாக்கியி , சிந்துகின்ற குருதியில்
இருவரும் திளைக்கின்றார்கள். அகமகிழ்கின்றார்கள்
அந்தத் திருமலையின் அக்கினி ஊற்றும
வடகரையில் வடிவம்பெற்ற புயலும்
மீண்டும் ஓர்முறை எங்களை ஊடுருவுகின்றார்கள்
ஓ! எங்கே அந்தத் துப்பாக்கி
எதிரியின் முன் நாம் பிடிக்க.


தற்போதைய முகவரி:

"பாக்கிய பவனம்",
கல்லூரி வீதி.
பருத்தித்துறை.

ஆனந் குடும்பத்தினர்,
'ஆனந் பண்ணை',
மயிலிட்டி.
காங்கேசன்துறை.

(5249)

பிறப்பு:
06.10.1969



இறப்பு:
15.09.1991

**அந்தோனிப்பிள்ளை அல்போன்ஸ் குணரட்ணம்**

சுவிசிலுள்ள கங்கை ஒன்று
சொலலாமல் கொள்ளாமல் உன் உயிரை
தான் பறித்த காரணத்தை நாமறியோம் எம்மகனே
தாள முடியவில்லை தவிக்கின்றோம் உம்பிரிவால்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக தும்பளை புனித மரியாள் தேவாலயத்தில் 15-ம் திகதி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தும்பளை,
பருத்தித்துறை.


உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, சகோதர,
சகோதரிகள், உறவினர்

(5329)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

சமயசமூகப் பணிகளில் தன் பங்கை ஏற்ற மாவீரன்
யாழ். நாயன்மார்கட்டு

பிறப்பு: 1969 — 06 — 07



வீரச்சாவு: 1989 — 07 — 15

**'இரகர் சிவா', - 'சின்னநசீர்'**
**இரகுநாதன் [கார்த்திகேயன்] சிவபரன்**

மண்ணுனை நினைத்திருக்கும்

நேயமாய் சனச மூக
நிலையத்தின் 'பொருள' ராகிப்
பாயுமோ ரன்பால் தண்ணீர்ப்
பந்தலின் செயல' ராகி
நீயிங்கு செய்த சேவை
நெஞ்சினில் நிற்கு தையா
மாயமாய் மறைந்த போதும்
மண்ணுனை நினைத்திருக்கும்.

எங்கள் நெஞ்சிருக்கும் வரை உனது நினைவிருக்கும் ஐயா

சிவரஞ்சனி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
(சி/7009)

அன்புத் தந்தை, தாய்,
சகோதரர், அத்தான்மார்,
மருமக்கள்.

மாங்குளத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த,

**சலீம்** (சிவனுப்பிள்ளையோகநாதன்-விசுவமடு.முல்லைத்தீவு)

யாழ்-பழையபூங்காப் பகுதியில் சிறிலங்கா விமானப் படைக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய,

**லெப்.அம்பி** (சித்தர் கனகரத்தினம் - அச்சுவேலி தெற்கு)

இத்தினம் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 03 தமிழர்கள்.

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மத்திய முகாம் 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

திருமலை- நிலாவெளி, கோபாலபுரம் இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 07 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியிலிருந்து கட்டைக்காட்டுக்கு முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் முகுந்தன்** (தியாகராசா விக்கினேஸ்வரன் - வத்திராயன் வடக்கு, தாளையடி - யாழ்.)
**லெப். சந்திரன்** (நாகராசா நவதாஸ் - அச்சுவேலி தெற்கு - யாழ்.)
**நியூட்டன்** (சந்தையா தேவராசா - களபூமி. கரைநகர்- யாழ்.)
**கரிகாலன்** (மாப்பாணர் உதயகுமார் - ஆவரங்கால், புத்தூர் கிழக்கு - யாழ்.)

மணலாறுப் பகுதியில் எமது முகாமை நோக்கிவந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப்.பாபு** (அரசரத்தினம்மனோகரன்-மாங்கேணி, வாகரைச்சேனை - மட்டு)
**குசேலன்** (டேவிற் சுரேஸ் - மாமங்கக் கொலனி - மட்டு)
**ஜெயசீலன்** (புஸ்பராசா அரியவிக்கினராசா- முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)
**கப்டன் மனோ** (கோணலிங்கம் சிறிதரன் — குச்சவெளி திருமலை)
**லெப். குஞ்சன்** [இமானுவேல் சந்திரகுமார் - இருதயபுரம், மூதூர் - திருமலை]
**லெப். ஞானி** [தம்பிராசா சிவநாதன்-இல 25, கொத்தி ஒழுங்கை - திருமலை]
**ராகவன்** [செல்லக்குட்டி பிரபாகரன் - 4-ம் வட்டாரம். மூதூர் - திருமலை]
**றிங்ஸ்** [மகாவிஷ்ணு திருமாலழகன்-குச்சவெளி-திருமலை]
**பிரமிளன்** (செபமாலை[கமிலஸ்]ரதீஸ்வரன் -4-ம் வட்டாரம், சீனன்குடா - திருமலை)
**கப்டன் பசிலன்** [சந்திரசேகரம் விமலநாதன்- கொக்குத்தொடுவாய் - மணலாறு]
**நிகேதன்** [கந்தப்பிள்ளை பற்குணநாதன் - பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி - மணலாறு]
**2 ம் லெப்.ரகுநாத்** [தில்லையம்பலம் பிரகாஷ்-மீனாட்சியம்மன் கோவிலடி - வல்வெட்டித்துறை]
**2-ம்லெப். இராஜேந்திரம்** [முத்து யோகராசா புன்னாலைக்கட்டுவன் - யாழ்]
**லெஸ்ரன்** [அருளம்பலம் தவக்குமார்-மானிப்பாய்-யாழ்]

1992ஆம் ஆண்டு மணலாற்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த -

**வெற்றிகொண்டான் / நவசிங்கம் / நவசங்கர்** [செபஸ்தியாம்பிள்ளை கஸ்ரன் பேணாட் குருநகர் - யாழ்.]
**முருகமூர்த்தி / முருகவேல்** [தங்கலிங்கம் கோணேஸ்வரன்- மஞ்சத்தடி, இணுவில் - யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-7008)

### சிந்தனைக்கு

பலமான எதிர்க்கட்சியின்றி எந்த அரசும், நீண்டநாள் பாதுகாப்பாக இருக்க முடியாது.

— பெஞ்சமின் டிஸ்ரேலி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-07-1998

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028

த. பெ. எண்-05


## 'தேசிய அரசு' புதிய பம்மாத்து

சிறிலங்கா அரசியல் வட்டாரங்களில் இன்று தேசிய அரசாங்கம் பற்றிப் பரவலாகப் பேசப்படுகின்றது. வடக்கு - கிழக்குப் பிரச்சினையை விரைவில் ஒரு முடிவிற்குக் கொண்டு வருதலே இதன் பிரதான நோக்கம் எனவும் கூறப்படுகின்றது.

இத்'தேசிய அரசு' அமைத்தல் என்ற விடயம் முதலில் அரசாங்கத் தரப்பில் இருந்தே உருவாக்கப் பெற்றுள்ளதாகக் கருதப்படுகின்றது. பின்னர் இத்தேசிய அரசு விடயத்திற்கு அரசாங்கத்துடன் இணைவதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ள காமினி திசாநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் முதன்மைப்படுத்திப் பேசிவருகின்றனர்.

மேலும் இத்'தேசிய அரசு' பற்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா அக்கறை காட்டுவதாக அரசியல் வட்டாரங்களிலும் பேசப்பட்டன. ஆனால், அனுரா பண்டாரநாயக்கா அதனைத் திட்டவட்டமாக மறுத்துள்ளதோடு, அரசுடன் இதுபற்றி எந்தக் கட்டத்திலும் எவருடனும், எவர் மூலமாகவும் தான் பேசவில்லை எனவும் தெரிவித்துள்ளார். அத்தோடு, சுதந்திரக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் இந்நிலைப்பாட்டில் இருந்து 'தேசிய அரசு' என்பது திட்டவட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியிலும், அதனுடன் கூட்டுச் சேரத் துடிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினதும் உருவாக்கம் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அதாவது,

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியானது வெற்றி பெற்றிருப்பினும், அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலுக்கோ அன்றி பாராளுமன்றத் தேர்தலுக்கோ இவ்வெற்றி போதாது என்பதே கணிப்பீடாகும். அதிலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடனான உறவில் ஏதாவது உடைவு ஏற்படுமானால் ஐ. தே. க வின் எதிர்காலமே பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி விடும். இந்நிலையில் எதிர்வரும் தேர்தல்களில் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டிய அவ

## வடபகுதி உணவு அனுப்புவதில் ரூ 10 லட்சம் மேலதிக செலவா?

### புனர்வாழ்வு ஆணையாளரிடம் கேள்வி

[கொழும்பு]

யாழ் அரச அதிபர் எந்தப் பொருள்களை சிபார்சு செய்கிறாரோ அதைத்தான் அனுப்புகின்றோம். குறைந்த விலையில் தரமான பொருள்களைத்தான் வாங்கி அனுப்புகின்றோம் இவ்வாறு கூறியுள்ளார் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா.

கடந்த வாரம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் நிருபர் ஒருவர், யாழ்ப்பாணத்திற்கு மைசூர் பருப்பு அனுப்புமாறு கோரப்பட்ட போது வட்டனா எனப்படும் பருப்பு அனுப்பப்பட்டதாகவும், இந்த வட்டனா பருப்பு பகிரங்க சந்தையில் கிலோ 35ரூபாவாக விற்கும்போது கிலோ 42ரூபாவாக வாங்கப்பட்டதாகவும் பத்து லட்சம் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது உண்மையா? என்று கேட்டபோதே கிறிஸ்ரி சில்வா மேற்கண்டவாறு பதிலளித்தார்.

தரமானபொருள்கள் அனுப்பப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட பின்பே பொருள்களுக்கான பணக்கொடுப்பனவுமேற்கொள்ளப்படுகிறது. எனினும் தரம் குறைந்த பருப்பு அனுப்பப்பட்டது குறித்து விசாரிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இசுரேலுக்கு எதிராக சிறிலங்கா செயற்படுகிறது

— அமெரிக்க இராஜதந்திரி

(கொழும்பு)

சியோனிசம் மற்றும் இனத்துவேசம் என்பவற்றிற்கு எதிரான ஐ நா. தீர்மானத்தின் போது இசுரேலுக்கு எதிராக சிறிலங்கா கடந்த ஆண்டில் வாக்களித்தமை துரதிட்டமானதாகும் என்று அமெரிக்க இராஜாங்க திணைக்கள முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவரக கேட்போர்கூடத்தில் 'கெடுபிடி போர் முடிவுக்குப் பின்கீழைநாடுகளில் அமெரிக்க நலன்கள்' என்னும் பொருள் பற்றி உரையாற்றிய சிட்னி சோபர் மேலும் கூறுகையில், இந்தியா போன்ற நாடுகள் கூட இசுரேலுக்கு ஆதரவுப் போக்கை கடைப்பிடித்து வரும் இந்நிலையில் சிறிலங்கா தொடர்ந்தும் இசுரேலுக்கு எதிரான போக்கை கடைப்பிடிப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

வளைகுடாப் பிராந்தியத்தில் அமெரிக்க கடற்படைகளின் பிரசன்னம் இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிரானதா எனக் கேட்கப்பட்ட போது அவ்வாறு கூறுவது பொருத்தமற்றது என்றும் அமெரிக்கா எல்லாவகையான வன்முறைச் செயல்களையும் எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

## பழரச உற்பத்தியாளருக்கு அறிவுறுத்தல்

மென்பானம், பழரசம் என்பன தயாரிப்பவர்களுக்கு தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பொருள்களை உற்பத்தியின் போது பயன்படுத்த வேண்டாமென அறிவுறுத்தல் விடுத்துள்ளது. இது தொடர்பாக இந்நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், தரத்தைப்பேணுதல் எனபவற்றில் ஈடுபட்டுள்ள இந்நிறுவனம் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு தரமற்ற உற்பத்திகளை தடை செய்ய வேண்டிய கடமைப் பாட்டிற்கும் உள்ளாகின்றது தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மீறுவோர் மீது தமிழீழ காவல் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

மென்பானம் மற்றும் பழரசம் தயாரிப்பின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக விடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்கள் வருமாறு;

சக்கரின் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட சாயங்கள், உணவு பாதுகாப்பு இரசாயனங்கள் பயன்படுத்தக் கூடாது தயாரிப்பு நிலையம் சுகாதார சட்டங்களுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும் போத்தல்களில் ஒட்டப்படும் லேபல்களில் தயாரிக்கப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி, தயாரிக்கும் நிறுவனத்தின் பெயரும் முகவரியும், உள்ளடக்கப்பட்டுள்ள பொருள்களின் விபரம், போத்தல்களின் கொள்வனவு என்பன தெளிவாக குறிக்கப்பட வேண்டும். காபனீரொக்சைட் சேர்ப்பதாயின் அதற்குரிய வகையில் அடைக்கப்பட வேண்டும் என்பவையாகும்.

### தீ விபத்தில் தாயும் மகளும் காயம்

கொடிகாமம் அல்லாரை பகுதியைச்சேர்ந்த ஒரு தாயும், மகளும் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகியநிலையில் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது பற்றி தெரிய வருவதாவது, மகளின் உடையில் பற்றிய தீயை தாயார் அணைக்க முயன்றதாகவும் இதனால் இருவரும் எரிகாயங்களுக்கு உள்ளானதாக உறவினர் ஒருவர் தெரிவித்தார் இவ்வாறு எரிகாயங்களுக்கு உள்ளானவர்கள் சின்னம்மா (வயது 60) இவரது மகள் சரஸ்வதி (வயது 35) ஆகியோராவர். இச்சம்பவம் நேற்றுக் காலை 10-00 மணியளவில் நிகழ்ந்தது என தெரிய வருகின்றது. (சி) (86)

### விளையாட்டு விழா

தொல்புரம் செல்வா சனசமூக நிலையச் சிறுவர் பாடசாலையும், காரை - சிறுவர் பாடசாலையும் இணைந்து நடத்திய இரண்டாவதுவிளையாட்டு விழா கடந்த ஞாயிறு அன்று மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றது.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக காரை - மத்தி கிராமசேவையாளரும், சமய சமூகப் பணியாளருமான திரு. எஸ் கே. சிவலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் திரு.சி.கீரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கல்வி, கலைநிகழ்ச்சிகள். விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை திறம்பட செயற்படுத்தி சாதனை புரிந்தமைக்காக மேற்படி பாலர் பாடசாலைகளின் ஆசிரியை செல்வி அ. புஸ்பராணி அவர்கள் அனைவரினாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

## ஐ. தே. கவுடன் இணைவதை சிறிமானி எதிர்க்கிறார்

(கொழும்பு)

காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் மனைவி திருமதி சிறிமானி அத்துலத்முதலி ஐ. தே. கவுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைவதை எதிர்த்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஐ தே.கவில் மீண்டும் இணைவது தொடர்பாகக் காலஞ்சென்ற அத்துலத்முதலி கடும்போக்கையே கடைப்பிடித்து வந்ததாகவும், அதனைச் சரியென்று தான் இன்னமும் நம்புவதாகவும் தெரிவித்தார்.

சுதந்திரத்திற்கு முந்திய நிகழ்ச்சியொன்றை சுட்டிக் காட்டிய திருமதி சிறிமானி இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறிய டி.எஸ். சேனநாயக்க மீண்டும் அதனுடன் இணைந்துகொள்ளவில்லை. பதிலாக அக்கட்சியில் இருந்தவர்கள்தான் ஐ. தே கவுடன் பின்னர் இணைந்து கொண்டனர் என்றும் தெரிவித்தார்.

### நான்காம் ஆண்டு நிறைவு விழா

(குருநகர்)

சைவ சித்தாந்த ஆய்வுவட்டத்தின் 4ஆம் ஆண்டு நிறைவு விழா 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியில் இருந்து பிற்பகல் 1 30 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகள் தலைமையில் நடைபெறும். மேற்படி விழாவில் 'திருவுந்தியார்' இசையுடன் பாடல், 'திருவுந்தியார்' சிறப்புரைகள், சமயத்தூது இசை உரைச் சித்திரம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும் (21)

### சென். அன்ரனிஸ் வெற்றிபெற்றது

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிண்ணத்திற்காக நடாத்தப்பட்ட இறுதிப் போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம். நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இப் போட்டி பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. (17)

## 'மோகனதாசின்' படுகொலை லண்டனில் வெளியீடு

முன்னாள் தமிழக உளவுத்துறை பொலிஸ்மா அதிபர் கே. மோகனதாஸ் லண்டனில் இன்று 'படுகொலை' என்ற தலைப்பிலான ஆங்கில நூல் ஒன்றை வெளியிடுகிறார். இந் நூல் ஆழ்ந்த ஆராய்ச்சிக்கும் விசாரணைக்கும் பின் இவரால் எழுதப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

இந்திய தடா தடைச்சட்டத்திலிருந்து தப்ப இவர் இந் நூலில் கூறப்படுபவையை கற்பனைக் கதைவடிவில் எழுதிச் செல்கிறார். இந்திய அரசியல் குறித்து ஓரளவு அறிவு உள்ளவர்க்கும் இதில் வரும் பாத்திரங்களையும் இடங்களையும் அடையாளம் கண்டு கொள்வர் எனக் கூறப்படுகிறது.

இந்நூலை வெளியிடுவதற்காக மோகனதாஸ் லண்டன் சென்றிருந்தார்.

## புலிகளை கட்டுப்படுத்த தமிழ்நாட்டில் நடவடிக்கை

### ஆளுநர் தெரிவிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த மாநில அரசு முயற்சிகளை மேற் கொண்டு வருவதாக தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி நேற்று தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது ஒரு தொடரான நடவடிக்கை என்றும் அவர் கூறினார்.

மதுரையில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் காங்கிரஸ் கட்சியினர் திங்களன்று மேற்கொண்ட ஹர்த்தாலின் போது அ.தி.மு.க. தொண்டர்கள் தமது கட்சியினரை தாக்கியதாக வாழப்பாடி ராமமூர்த்தி கொடுத்திருந்த மனுவை தாம் தமிழக அரசின் கவனத்திற்கு சமர்ப்பித்துள்ளதாகவும் கூறினார். ஜெயலலிதாவுக்கு எதிரான சுப்பிரமணியம் சுவாமியின் மனு குறித்து தாம் தகுந்த முறையில் பரிசீலித்து வருவதாக ஆளுநர் ரெட்டி மேலும் தெரிவித்தார்.

## சுய ஆதாயம் தேட மனித உரிமைக் கவசம்

எந்தக் கட்டத்திலும் எவருடனும், எவர் மூலமாகவும் தான் பேசவில்லை எனவும் தெரிவித்துள்ளார். அத்தோடு, சுதந்திரக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் இந்நிலைப்பாட்டில் இருந்து 'தேசிய அரசு' என்பது திட்டவட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியிலும், அதனுடன் கூட்டுச் சேரத் துடிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினதும் உருவாக்கம் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அதாவது,

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியானது வெற்றி பெற்றிருப்பினும், அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலுக்கோ அன்றி பாராளுமன்றத் தேர்தலுக்கோ இவ்வெற்றி போதாது என்பதே கணிப்பீடாகும். அதிலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடனான உறவில் ஏதாவது உடைவு ஏற்படுமானால் ஐ. தே. க வின் எதிர்காலமே பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி விடும். இந்நிலையில் எதிர்வரும் தேர்தல்களில் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் ஐ. தே. க விற்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, லலித்தின் கொலையுடனும், பிரேமதாசாவின் மரணத்துடனும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைமைத்துவமும், கொள்கையும் அற்றுத் தவிக்கின்றது. இந்நிலையில், ஜ. ஐ. தே. முன்னணியைத் தனியொரு கட்சியாக வழிநடத்திச் செல்லுதல் கடினமாகும். அத்தோடு, மாகாண சபைத் தேர்தலில் இக்கட்சியால் பெரும் வெற்றி எதையும் பெற முடியவில்லை. இந்நிலையில் தனித்துவமாகச் செயற்படின் எதிர்காலத்தில் மேலும்பலம்குன்றிவிடும் என்ற நிலையில் ஜ ஐ.தே. முன்னணி ஐ. தே. கட்சிக்குள் கலந்துவிடப்பார்க்கின்றது.

அதாவது ஐ. தே. கட்சியும், ஜ. ஐ. தே. முன்னணியும் தமது நெருக்கடிகள், தேவைகள் என்பனவற்றிற்காகக் கூட்டுச் சேர முற்படுவதைத் 'தேசிய அரசு' அமைத்தல் என்ற ரீதியில் மூடிமறைக்கப் பார்க்கின்றன. அதாவது தாம் இணைந்து கொள்வதற்காக மக்களையும், எதிர்க்கட்சிகளையும் அவை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன.

அவ்வாறுதான் இல்லாவிடினும் தேசிய அரசு ஒன்று அமைப்பதன் மூலம் அரசாங்கத்தால் எவ்வாறு இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும்? இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வென்றால் அதற்கு தேசிய அரசு தேவையில்லை. ஏனெனில் இன்றுவரை சிங்களக் கட்சிகள் அனைத்தும் இராணுவத் தீர்விற்குத் தமது ஆதரவைக் கொடுத்தே வருகின்றன. இராணுவமும் தொடர்ந்து போரிட்டுக்கொண்டே வருகின்றது.

அரசியல் தீர்வானால் இனப்பிரச்சினை குறித்து இதுவரை நடந்த சர்வகட்சி மாநாடுகள், தெரிவுக்குழு கூட்டங்கள் என்பனவற்றி[illegible] காணமுடியாத இணக்கத்தை 'தேசிய அரசு' என்ற ரீதியில் எவ்வாறு எட்ட முடியும்? 'தேசிய அரசிலும்' இதே கட்சியைச் சேர்ந்த இதே உறுப்பினர்கள்தானே பங்குபற்றப் போகின்றார்கள். இந்நிலையில், தீர்வை நோக்கி எவ்வாறு நகர்வது?

இந்நிலையில்இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் முதலில் இக்கட்சிகள் ஒவ்வொன்றும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். பின்னர் இததீர்வுத் திட்டம் குறித்து ஓர் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். அதைவிடுத்து தற்பொழுது 'தேசிய அரசு' ஒன்று உருவானால் இனப்பிரச்சினையை தீர்க்கலாம் என்பது கேலிக்கூத்தாகும்.

---

நிறுவனம் மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பொருள்களை உற்பத்தியின் போது பயன்படுத்த வேண்டாமென அறிவுறுத்தல் விடுத்துள்ளது. இது தொடர்பாக இந்நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல்,மேம்படுத்துதல், தரத்தைப்பேணுதல் எனபவற்றில் ஈடுபட்டுள்ள இந்நிறுவனம் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு தரமற்ற உற்பத்திகளை தடை செய்ய வேண்டிய கடமைப்பாட்டிற்கும் உள்ளாகின்றது தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மீறுவோர் மீது தமிழீழ காவல் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

மென்பானம் மற்றும் பழர

விடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்கள் வருமாறு;

சக்கரின் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட சாயங்கள், உணவு பாதுகாப்பு இரசாயனங்கள் பயன்படுத்தக்கூடாது தயாரிப்பு நிலையம் சுகாதார சட்டங்களுக்கு அமைந்ததாக இருத்தல்வேண்டும் போத்தல்களில் ஒட்டப்படும் லேபல்களில் தயாரிக்கப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி, தயாரிக்கும் நிறுவனத்தின் பெயரும் முகவரியும், உள்ளடக்கப்பட்டுள்ள பொருள்களின் விபரம்,போத்தல்களின் கொள்வனவு என்பன தெளிவாக குறிக்கப்பட வேண்டும். காபனீரொக்சைட் சேர்ப்பதாயின் அதற்குரிய வகையில் அடைக்கப்பட வேண்டும் என்பவையாகும்.

நடத்திய இரண்டாவதுவிளையாட்டுவிழா கடந்த ஞாயிறு அன்று மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றது.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக காரை - மத்தி கிராமசேவையாளரும், சமய சமூகப் பணியாளருமான திரு. எஸ் கே. சிவலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் திரு.சி.கீரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கல்வி, கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை திறம்படச் செயற்படுத்தி சாதனை புரிந்தமைக்காக மேற்படி பாலர் பாடசாலைகளின் ஆசிரியை செல்வி அ. புஸ்பராணி அவர்கள் அனைவரினாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

---

பழநி, ராணிப்பேட்டை

# இடைத்தேர்தல் ஆகஸ்ட் 19இல் தேர்தல் ஆணையம் அறிவிப்பு

(டில்லி)

பழநி நாடாளுமன்ற மக்களவை தொகுதிக்கும் ராணிப்பேட்டைசட்டமன்றத் தொகுதிக்குமான இடைத்தேர்தல்கள் ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதியன்றுநடைபெறும்என்று மத்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் 20ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு இம்மாதம் 27-ம் திகதி இறுதி நாள் ஆகும். 28-ம்திகதி வேட்பு மனுக்கள் பரிசீலிக்கப்படும். வேட்பு மனுக்களை விலக்கிக்கொள்ள 30-ம் திகதி கடைசித் தினமாகும்

கடந்த மே 19-ம் திகதி இந்த இடைத்தேர்தல் நடைபெற இருந்தது தெரிந்ததே. ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டபின்னர் மாநில அரசு வெளியிட்ட சில அறிவித்தல்கள் தேர்தல் நெறிமுறைக்கு முரணானது என்று கூறி தேர்தல் கமிஷன் அத் தேர்தலை ஒத்திவைத்தது அதே போல பழநி மக்களவைத் தொகுதிக்கான தேர்தலும் வரட்சி காரணமாக ஒத்திப் போடப்பட்டது.

கோளமாநிலத்தின் ஒத்தப்பாலம் நாடாளுமன்ற மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும்ஆகஸ்ட் 19-ல்நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

பங்கு பத்திர ஊழல்

## பிரதமர் அலுவலகத்திடம் ஆவணங்கள் கோரப்பட்டன

(டில்லி)

பங்குப் பத்திர ஊழல் குறித்து விசாரணை நடத்திவரும் கூட்டுப் பாராளுமன்ற குழு பிரதம மந்திரியின் அலுவலகத்திலிருந்து சில ஆவணங்களை கோரியுள்ளது. 1991 நவம்பர் மாத நடவடிக்கைகள் தொடர்பான ஆவணங்களும் 1991 நவம்பர் 4ஆம் திகதிய பிரதமரின் அலுவல் பட்டியலும் கூட கோரப்பட்ட ஆவணங்களில் அடங்கியுள்ளன. 1991 நவம்பர் 4-ல் தான் பங்குத்தரகர் ஹர்சத் மேர்தா பிரதமர் நரசிம்மராவிடம் ஒருகோடி ரூபாய் கொடுத்ததாகக் குறிப்பிட்டிருப்பது தெரிந்ததே மகாநகர் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திடமிருந்தும் சில ஆவணங்கள் கோரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

பூரண

ஏற்பட்டால் அவர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்து அதன் அடிப்படையிலேயே சிகிச்சை அளிக்கப்படவேண்டும். இவர்களுக்கு சிகிச்சை அளிக்கும்போது பிறிமாகுயினை விலக்கி குளோறோகுயின் மாத்திரம் கொடுபடல் வேண்டும். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு கிழமையும் 300 மி. கி (இருவில்லைகள்) குளோறோக்குயின் பிரசவித்த பின் 6 கிழமைகள் வரை எடுத்தல் வேண்டும். இதன் முடிவில் பூரண சிகிச்சை தாய்க்கு வழங்கப்படல் வேண்டும்.

இந்நோயினால் பீடிக்கப்படுவோர் தமது வயதிற்கேற்றவாறு மருத்துவரின் ஆலோசனைப்படி குளோறோகுயின் [வெள்ளைநிறம்] 150 மி கி [ஒரு வில்லை] பிறிமாகுயின் [மண்ணிறம்] 75 மி. கி [ஒரு வில்லை] எடுத்தல் வேண்டும்.

[சி],[நி]

துணைப்படை

கோட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர்செல்வி பாடினி மற்றும் துணைப்படை வீரர்களான திரு. தேவராஜா, திரு. சந்திரமோகன், திரு. சத்தியசீலன், திரு. ஏகாம்பரம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

குடும்பநல

களின் மூன்று குழுவுக்கும், குடும்ப நலசேவையாளரின் 7 குழுவுக்கும் பகுதி பகுதியாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி ஜூன் இறுதி தொடக்கம் ஒக்டோபர் இறுதி வரை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது இதே வேளை இப்பயிற்சி நெறி வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சகலருக்கும் யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரியிலேயே வழங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

# புலிகளை கட்டுப்படுத்த தமிழ்நாட்டில் நடவடிக்கை

## ஆளுநர் தெரிவிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த மாநில அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி நேற்று தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது ஒரு தொடரான நடவடிக்கை என்றும் அவர் கூறினார்.

மதுரையில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் காங்கிரஸ் கட்சியினர் திங்களன்று மேற்கொண்ட ஹர்த்தாலின் போது அ.தி.மு.க. தொண்டர்கள் தமது கட்சியினரை தாக்கியதாக வாழப்பாடிராமமூர்த்தி கொடுத்திருந்த மனுவை தாம் தமிழக அரசின் கவனத்திற்கு சமர்ப்பித்துள்ளதாகவும் கூறினார். ஜெயலலிதாவுக்கு எதிரான சுப்பிரமணியம் சுவாமியின் மனு குறித்து தாம் தகுந்த முறையில் பரிசீலித்து வருவதாக ஆளுநர் ரெட்டி மேலும் தெரிவித்தார்.

# சுய ஆதாயம் தேட மனித உரிமைக் கவசம்

## இந்திய ஜனாதிபதி எச்சரிக்கை

(டில்லி)

தனிமனித சுதந்திரம், மற்றும் மனித உரிமைகள் என்பவற்றைப் பயன்படுத்திக் கொண்டு சுய ஆதாயம் தேட முயலும் சக்திகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் என்று இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா எச்சரிக்கை செய்துள்ளார்.

உக்ரைன் தலைநகர் கீவ்வில் அதிபர் அளித்த விருந்துக்கு நன்றி தெரிவித்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில்; அரசுக்குஎதிரான சக்திகளுக்கு ஊக்கமளிப்பதை பிறநாட்டு அரசுகள் கைவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

---

அனாதை இல்லம்

(குருநகர்)

இருபாலை, மருதனார் மடம் வீதியில் பெற்றோரை இழந்த சிறார்களுக்கான அனாதை இல்லம் ஒன்றை மனித முன்னேற்ற நடுநிலையம் ஆரம்பித்துள்ளது.

(21)

## தற்கொலை

கரவெட்டி தபாலக உதவித் தபாலதிபர் நேற்றுமுன்தினம் இரவு கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கரணவாயைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கவல்லிபுரநாதர் (வயது 50) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவர்.

இவர் ஒரு நோயாளி என்றும், நீண்டநாட்களாக நோயினால் அவஸ்தைப்பட்டிருந்தாரென்றும், நோய்க்குரிய மருந்து கடந்தசில தினங்களாக பெற்றுக் கொள்ள முடியாமல் போனதினால் நோயின் வேகம் தாங்கமுடியாமலே இவ்வாறு தற்கொலைசெய்துகொண்டாரெனவும் தெரியவருகிறது.

---

பத்திரிகை

பொல மீதான வழக்குகளைத் தள்ளுபடிசெய்து அவருக்கு மன்னிப்பு வழங்கியதைத் தொடர்ந்தே பத்திரிகை ஆசிரியர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்

நூர்டீன் ஹஜியார் கம்பனியில் கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகள் தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு லஞ்சம் கொடுக்க அக்கம்பனியின் இயக்குனரான எம். ஏ. ஹனிபா கொழும்பு வங்கி ஒன்றில் 5 இலட்சம் ரூபா பெற்றதாக உடுகம்பொல ஒரு சத்தியக் கடதாசியை வெளியிட்டிருந்தார். இந்த சத்தியக் கடதாசியின் வாசகங்களை யுக்தியவும், லக்தீவவும் ஏப்பிரல் 12, 1992 இதழ்களில் வெளியிட்டிருந்தன.

அநாமதேய ஆதாரமற்ற தகவல்களின் அடிப்படையில் சத்தியக் கடதாசிகளைத் தான் வெளியிட்டதாகவும், அரசுக்கெதிராகத் தான் தெரிவித்த குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுவதாகவும் நீதிமன்றத்தில் உடுகம்பொல சத்தியக் கடதாசி தாக்கல் செய்திருந்தார். அதைத் தொடர்ந்தே சட்ட மா அதிபர் திணைக்களம் அவருக்கெதிரான குற்றச் சாட்டுகளைக் கைவிட்டுள்ளது அத்துடன் பத்திரிகைகளுக்கு எதிரான வழக்குகளும் வாபஸ்பெறப்பட்டன.

உடுகம்பொல

டது. ஆனால் இந்தியாவில் தலைமறைவாகி இருந்து நாடு திரும்பியுள்ள உடுகம்பொலவுக்கு அமெரிக்க விஸா வழங்கப்படலாம் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது.

அண்மையில் இவர் ஐ தே.க அரசாங்கம் மீது தான் சுமத்திய குற்றச்சாட்டுக்களை வாபஸ்பெற்றமைதெரிந்ததே.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 14-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10380

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-2151, 41-9876, 24-7623, 26-0989, 42-6119
27-5449, 24-0922, 24-8353, 26-3046, 27-4289
24-6053, 42-6226, 42-5590, 27-4920, 28-0912.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-8754, 26-1609, 40-7583, 28-5862, 41-8432
26-2979, 27-1375.


## தேவை

**அச்சுக்கோர்ப்பாளர்**
(தமிழ், ஆங்கிலம்)

**இயந்திர இயக்குநர்**
(தன்னியக்க மற்றது)

மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.
தகுதியானோர் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**ஈழநாதம்**
81, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (இ)


## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் அதிபர்
அமரர் கனகசபை சிவபாதசுந்தரம்
(S. L. E. A. S. III) B.sc (Hons) Dip- in Ed.

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கனகசபை சிவபாதசுந்தரம் அவர்களின் திடீர் மறைவு கேட்டு ஆற்றொணாத் துயர் அடைவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக் கொண்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா / விக்னேஸ்வராக் கல்லூரி,
கரவெட்டி.,

(5380)

## கண்ணீர்க் காணிக்கை

எமது முன்னை நாள் அதிபர்
அமரர்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
20.06.1976

வீரச்சாவு
15.07.1992

**2-ம் லெப். வெற்றிகொண்டான்**
[செபஸ்ரியாம்பிள்ளை கனிஸ்ரன் பேனாட்]
(குருநகர், யாழ்ப்பாணம்)

கல்வி கற்கும்வேளையிலே — மண்ணின்
மானம் காத்திட வ விரைந்திட்டாய் நீயும்
இலட்சியத்தின் பாதையிலே — மாவீரன்
எனும் போர்வையிலே திகழ்கின்றாய் இன்று.

- குடும்பத்தினர்

(5350)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் அரசன்**

## மீனவர் மீது தாக்குதல்

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற் பிராந்தியத்தில் சிறிலங்கா கடற் படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

நேற்றுக் காலை 7.00 மணியளவில் திக்கம், சற்கோட்டை கடற்பரப்பில் ரோந்து சென்ற படையினர் மீனவர்கள் மீது தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலை மேற் கொண்டனர்.

மீனவர்கள் மீது மேற் கொள்ளும் பீரங்கிக் குண்டுகள் கரையோரக் குடியிருப்புக்களுக்கு அண்மித்து கடலில் விழுந்து வெடிப்பதாக கரையோரப் பகுதி மக்கள் தெரிவித்தனர். கடற்படையினரின் இவ் அட்டகாசத்தினால் மீனவர்கள் மத்தியில் பீதி நிலவுகிறது.

இதே வேளை இரவு நேரங்களில் பலாலியிலிருந்து இடைக்காட்டுக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் ஏவப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (யோ)

## மாரடைப்பால் மரணம்

(நெல்லியடி)

சேவை அடிப்படையில் பாடசாலையில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் மாரடைப்பால் நேற்றுக் காலை மரணமானார்.

இச்சம்பவம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய திரு. கனகசபை சிவபாதசுந்தரம் (வயது 58) என்பவரே இவ்வாறு மரணமடைந்த ஆசிரியராவார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், கரவெட்டி பொன்னம்பல வித்தியாலயத்திலும் சேவை அடிப்படையில் ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்து வந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (30)

## மினிபஸ் குடைசாய்ந்தது

(வடமராட்சி)

பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் மினிபஸ் ஒன்று நீர்வேலிப் பகுதியில் குடைசாய்ந்ததில் ஒரு சிலர் காயங்களுக்கு இலக்காகினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு வந்து கொண்டிருந்த போது திடீரென ஏற்பட்ட கோளாறினால் பஸ் வீதியை விட்டு விலகி தோட்டப்பகுதிக்குள் புரண்டது. இன்பருட்டியைச் சேர்ந்த சூரியகுமாரன் என்பவரும்

## சாவினால் ஒரு சரித்திரம் வரைந்தவனின் 10-வது ஆண்டு நினைவின் உயிர்ப்பு



**மாவீரன் லெப். சீலன்**
[லூ. சாள்ஸ் அன்ரனி]
[பேராலய வீதி. திருக்கோணமலை]

பிறப்பு: 19-11-1960
வீரச்சாவு: 15-07-1983

கொடையாக தனதுயிரைக் கொடுத்த வீரன்!


படை நடத்தித் தமிழினத்தைப்
பதைக்க வாட்டி!
இடரளிக்கும் சிங்களப் - பேர்
இருளைப் போக்கும்
சுடரெனவே துடித்தெழுந்த
தூய சீலன்!
கொடையாகத் தனதுயிரைக்
கொடுத்த வீரன்!

தாயகத்தின் விடிவுக்காய்
தன்னை ஈந்த!
தூய மகன் சீலனவன்
துலங்கும் விண்மீன்!
நேயமுடன் அவன் நினைவை
நெஞ்சில் ஏற்றி!
வாயார துதித்து அவனின்
வழியில் செல்வோம்!

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட
வீரவேங்கை ஆனந்திற்கும்
எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

கொக்குவில்,
யாழ்ப்பாணம். (சி/7014) - நண்பர்கள்

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கனகசபை சிவபாதசுந்தரம் அவர்களின் திடீர் மறைவு கேட்டு ஆற்றொணாத் துயர் அடைவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக் கொண்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா / விக்னேஸ்வராக் கல்லூரி,
கரவெட்டி.,

(5380)

## கண்ணீர்க் காணிக்கை

எமது முன்னைநாள் அதிபர்
அமரர்
கனகசபை சிவபாதசுந்தரம் B Sc. (Hons)
அவர்கட்கு

எமது கண்ணீரை காணிக்கையாக்கு கின்றோம்.

**இந்துமாமன்றம்**
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி,
கரவெட்டி.

(5381)

## மரண அறிவித்தல்

அமரர்
**கனகசபை சிவபாதசுந்தரம்**
(S. L. E. A. S.) B. Sc. (Hons) Dip. in Ed.

ஓய்வுபெற்ற முன்னாள் யா/விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. கனகசபை சிவபாதசுந்தரம் (S. L. E. A. S.) காலமானார். அன்னார் திருமதி செல்வராணியின் அன்புக் கணவரும், க. கதிர்காமத்தம்பி (ஓய்வுபெற்ற R. M P), க. கணேசபிள்ளை, திருமதி உமாதேவி முருகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜ்குமார், ரஜீவ் (லண்டன்], திருமதி ரமணி செல்வநாதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாதன் பொறியியலாளர்) சாரதா ஆகியோரின் மாமனாரும், பதிதி, சறோஜன் ஆகியோரின் பேரனும் ச. முருகேசு (ஓய்வுபெற்ற A.O), வள்ளியம்மை, பொன்னம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை [15-07-93] பி. ப. 3.00 மணிக்கு ரட்ணவாசா உண்டுவத்தையில் இருந்து தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
முருகேசு (மைத்துனர்)

(5382)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## கப்டன் அரசன்

(சோமசேகரம் யோகேந்திரன்)

மண்ணில்: 27-07-1971 மனங்களில்: 22-07-1991

திதி: 15-07-1993

கண்ணில் தெரியுதே உன் முகம்
கனவாய் போனதா உன் நியம்
எண்ணில் அடங்கிடா எம் துயர்
ஏங்கும் மனது உன் நினைவினில்
மண்ணில் பிறந்தவர்களுக்கு மரணம் நியதியே
மாவீரர் உம்வழி தொடர்வதே எம்பணி

இன்று நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

யோகேந்திரன் வீதி,
நடுத்தெரு,
அரியாலை.

—குடும்பத்தினர்

(5374)

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், கரவெட்டி பொன்னம்பல வித்தியாலயத்திலும் சேவை அடிப்படையில் ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்து வந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (30)

## மினிபஸ்

### குடைசாய்ந்தது

(வடமராட்சி)

பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் மினிபஸ் ஒன்று நீர்வேலிப் பகுதியில் குடைசாய்ந்ததில் ஒருசிலர் காயங்களுககு இலக்காகினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு வந்து கொண்டிருந்த போது திடீரென ஏற்பட்ட கோளாறினால் பஸ் வீதியை விட்டு விலகி தோட்டப்பகுதிக்குள் புரண்டது. இன்பருட்டியைச் சேர்ந்த சூரியகுமாரன் என்பவரும் காயத்திற்கு இலக்கானவரில் ஒருவராவர். நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. (யோ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

1993 ஆகஸ்ட் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சை சம்பந்தமான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி முற்பகல் 10 00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கடிதம் கிடைக்கப்பெற்றவர்கள் இவ் அறிவுறுத்தல் கூட்டத்தில் தவறாது பங்குபற்றுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா கேட்டுக்கொண்டுள்ளார். [பா]

இன்று மங்களகரமான திறப்பு விழா

**சோழன் நெல் அரிசி வாணிபம்**

பலாலி வீதி, திருநெல்வேலியில் புதிதாகத் திறக்கப்படவிருக்கும்

**சோழன் நெல் அரிசி வாணிப நிலையத்தில்**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தரமான

நாட்டரிசி, தவிடு, நெல் மற்றும் உள்ளூர் விளைபொருள்களை

நியாய விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை சகல வியாபாரிகளுக்கும், பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகி,

சோழன் நெல் அரிசி வாணிபம்

(5388)

தூய மகன் சீலனவன்
துலங்கும் விண்மீன்!
நேயமுடன் அவன் நினைவை
நெஞ்சில் ஏற்றி!
வாயார துதித்து அவனின்
வழியில் செல்வோம்!

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட
**வீரவேங்கை ஆனந்திற்கும்**
எமது அஞ்சலியைத் செலுத்துகின்றோம்.

கொக்குவில்,
யாழ்ப்பாணம். (சி/7014)

— நண்பர்கள்

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை ஆனந்

(அருள்நாதன் இராமநாதன்)

(வீரமாணிக்க தேவன்துறை மயிலிட்டி)

பிறப்பு: 25-01-1964

வீரச்சாவு: 15-07-1983

தமிழ் ஈழத்தின் நிலவிலும்
மலரிலும் அதன் அசைவிலும்
சூரியக் கதிரிலும் தெரிகின்ற வீரனே
எங்கள் ஆனந்தே!
நீ கருக்கொண்ட வீரமாணிக்க தேவன்துறையின்
மக்கள் நாம்
உங்கள் முந்தையோர் கோலோச்சிய
மண்ணின் மைந்தர்கள் நாம்
உன்னை ஈழவேள்விக்கு ஆகுதியாக்கிய
வீரமிகு மறவர்கள் நாம்
தமிழ் ஈழத்து மக்கள் நாம். நாம்,
உன்னை நினைக்கின்றோம்
உனது நண்பன் சீலனை நினைக்கின்றோம்
நீ ஆடிய செருக்களத்தில் நீயே
குண்டு பெற்று வரலாறானவன்
எதிரிகை அணுகாமல் இயக்க மரபுப்படி
இருவர் உடல்களையும் அழித்து
அழியாப் புகழ் பெற்றுக்கொண்ட தம்பி
நாம் மெய்சிலிர்க்கின்றோம்
கிளர்ந்தெழுகின்றோம்
சிந்த வேண்டிய இரத்தம் சிந்தி
அடைந்திடுவோம் எங்கள் அமுதத்தினை
தமிழ் ஈழத்தினை எங்கள் தலைவர் வழியில்

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை வாழ் மக்கள்.

[5250]